வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 26.09.2025 வெள்ளிக்கிழமை | இதழ் : 269 | பக்கங்கள் : 08




## தமிழ் மக்களுக்கு சர்வதேச நீதி கோரி யாழில் உண்ணாவிரதப் போராட்டம்!

*யாழ்ப்பாணம், செப். 26*

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் தமிழ் மக்களுக்கு சர்வதேச நீதி கோரி சுழற்சி முறையி லான உண்ணாவிரதப்

07



## காற்றாலை உபகரணங்களை மன்னாருக்கு கொண்டு செல்வதை உடனே நிறுத்துங்கள்!

### மாவட்ட அரச அதிபருக்கு மகஜர் கையளிப்பு

*மன்னார், செப். 26*

மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைக்கத் தேவையான உபகரணங்களை திருகோணமலை துறைமுகத்தில் இருந்து மன்னார் தீவுக்கு கொண்டு செல்லும் வேலைகள் நடைபெறுகின்ற நிலையில் தயவு செய்து அவற்றை உடன் நிறுத்தி, மக்களிடம் பேச நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ். மார்க்கஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை பகல் மன்னார் மாவட்ட செயலகத்துக்குச் சென்று மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரனிடம் கையளித்த மகஜரில் அவர்

07

# பலஸ்தீனத்தை சுதந்திர நாடாக ஐ.நா.வில் அங்கீகரித்தார் அநுர

### மோதலை உடன் முடிவுக்கு கொண்டு வருமாறும் கோரிக்கை

**நியூயோர்க், செப்ரெம்பர் 26**

**பலஸ்தீனத்தை ஒரு சுதந்திர நாடாக அங்கீகரிப்பதாக இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். மேலும், இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையிலான மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அனைத்து ஆதரவையும் வழங்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய நாடுகள் பொது சபையின் 80ஆவது அமர்வு, நியூயோர் நகரில் ஐக்கிய நாடுகள் சபைத் தலைமையகத்தில் ஆரம்பமானதுடன், இலங்கை நேரப்படி நேற்றுக் காலை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அமர்வில் உரையாற்றினார்.

ஊழலுக்கு எதிரான போராட்டம் ஆபத்தானது என்றாலும், அதை எதிர்த்துப் போராடாமல் இருப்பது இன்னும் ஆபத்தானது என்று ஜனாதிபதி இதன்போது தெரிவித்துள்ளார்.

மேலும்,

07



## யாழ். மாநகர சபையில் திலீபனுக்கு அஞ்சலி!

*யாழ்ப்பாணம், செப். 26*

தமிழ் மக்களின் விடுதலைக்காக 12 நாள்கள் உண்ணாநோன்பிருந்து ஆகுதியான தியாக தீபம் திலீபனுக்கு யாழ்ப்பாணம் மாநகர சபையில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ். மாநகர சபையின் சபை அமர்வு மேயர் வி.மதிவதனி தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன் போது ஆரம்பத்திலேயே தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

07



## சாவகச்சேரி விபத்தில் இளைஞர் உயிரிழப்பு!

*யாழ்ப்பாணம், செப். 26*

சாவகச்சேரி - நுணாவில் ஏ-9 வீதியில் இடம் பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்ததுடன், பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ளார்.

சாவகச்சேரியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த டிப்பரை, அதே திசையில் மோட்டார் சைக்கிளில் சென்ற பெண் முந்திச் செல்ல முற்பட்ட போது எதிர்த் திசையாக யாழ்ப்பாணத்தில் இருந்து சாவகச்சேரி நோக்கி பயணித்த இளைஞர் செலுத்திய மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதி விபத்து சம்பவித்துள்ளது. இந்த விபத்தில் இளைஞன் சம்பவ இடத்திலேயே

07

## அரசின் புதிய கல்வி மறுசீரமைப்பு மாணவருக்கு சுமையாகக்கூடாது!

### பிரதமரிடம் சிறீதரன் எம்.பி. வலியுறுத்தல்

*கொழும்பு, செப். 26*

கல்வி திட்டத்தில் வரலாறு, சித்திரம் போன்ற பாடங்களில் தமிழரின் வரலாறுகள் மற்றும் தமிழர் அடையாளங்கள் திட்டமிட்டே மறைக்கப்படுகின்றன. புதிய கல்வி சீர்த்திருத்தத்தில் இவற்றுக்கு தீர்வுகள் காணப்பட வேண்டும். புதிய கல்வி மறுசீரமைப்பு மாணவர்களுக்கு சுமையானதாக அமையக்கூடாது என இலங்கை தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் பிரதமரிடம் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின் போது நிலையியல் கட்டளை 27/ 2இன் கீழ், பிரதமரும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரியவிடம்

07

## அநுராதபுரத்தில் விபத்து

## முல்லைத்தீவை சேர்ந்த 4 இளைஞர்கள் மரணம்

*முல்லைத்தீவு, செப். 27*

அநுராதபுரத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் முல்லைத்தீவைச் சேர்ந்த நான்கு இளைஞர்கள் உயிரிழந்தனர். மேலும், மூவர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

புதுக்குடியிருப்பு ஆடை தொழிற்சாலையிலிருந்து பயணித்த வானும் லொறியும் மோதுண்டு இந்த விபத்து இடம்பெற்றது.

இதில், செம்மலையை சேர்ந்த தி.விமலானந்தன் (வயது -38), வள்ளிபுனத்தை சேர்ந்த சசிகுமார் (வயது-31), புதுக்குடியிருப்பு 10ஆம்

07

## போதைப்பொருள் விநியோகிப்போர் மொட்டுக் கட்சியில் இருப்பவர்களே!

### அமைச்சர் ஆனந்த விஜயபால

*கொழும்பு, செப். 26*

நீதிமன்ற உத்தரவில்லாமல் எமது அரசாங்கம் யாரையும் கைது செய்ததில்லை. பாதாளக் குழுக்களை போஷித்து அதன் மூலம் நாட்டுக்குள் போதைப் பொருள் கொண்டுவந்து விநியோகிப்பவர்கள் மொட்டு கட்சியில் இருப்பவர்கள் என்பது நாட்டு மக்களுக்கு தெரியும். அதனால் போதைப்பொருள் தொடர்பான குற்றச்சாட்டை எமது அரசாங்கத்தின் மீது சுமத்தி தப்பிக்க முடியாது

07

## போதைப்பொருள் அரசாங்கமாக மாறிவருகிறது அநுரவின் அரசு

### சபையில் சாடினார் நாமல் ராஜபக்ஷ

*கொழும்பு, செப். 26*

தற்போதைய அரசாங்கம் போதைப்பொருள் அரசாங்கமாக மாறி வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்த நாட்டில் அரட்டை அடித்த அரசாங்கங்களுக்குள் அதிகப்படியான பொய்களைக் கூறி மக்களை ஏமாற்றிய அரசாங்கமாக தற்போதைய அரசாங்கம் மாறியுள்ளதாக அவர்

07

## பொலிஸாரை கண்டு ஓடியவர் கிணற்றில் தவறி விழுந்து பலி

*கிளிநொச்சி, செப். 26*

கிளிநொச்சி, இராமநாதபுரம் பகுதியில் குற்றச் செயலுடன் தொடர்புடைய நபரை பொலிஸார் கைது செய்வதற்கு வீடு சென்றவேளை பொலிஸாரை கண்டு தப்பியோடிய சந்தேக நபர் கிணறொன்றுக்குள் தவறி விழுந்து உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் இரவு மாலை சுமார் 6.30 மணி அளவில் குறித்த பகுதியில் சட்ட விரோத கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக பொலிஸாருக்கு இரகசிய தகவலொன்று கிடைத்துள்ளது.

07

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவிருக்கும் சர்வஜன வாக்கெடுப்பை தோற்கடிக்க தமிழர் முன் வரவேண்டும்

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 26

"வரவிருக்கும் சர்வஜன வாக்கெடுப்பை தோற்கடிக்க தமிழ் மக்கள் முன் வரவேண்டும். முன்னணி, தமிழ்த் தேசியப் பேரவையுடன் ஒப்பந்தத்தை ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி செய்து கொண்டுள்ளது. அந்த வகையில் ஏக்கிய இராச்சியவை எதிர்க்கவேண்டும். 13ஐ பேசி மக்களை திசை திருப்ப வேண்டாம். ஏக்கிய இராச்சியவுக்கு எதிராக வேலை செய்யவேண்டும்." - இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜெனிவா சென்றிருந்தபோது சுவிஸ் ஆட்சி முறை தொடர்பான கல்விப் பட்டறை இடம்பெற்றது. இதில் இலங்கையில் உள்ள கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இங்கு சமஷ்டி தொடர்பான கல்வி கருத்தரங்கு இடம்பெற்றது. புலம்பெயர் மக்கள் அமைப்புகள்தான் கலந்து கொண்டன.

ஐ. நா. ஆசிய பசுபிக் பொறுப்பதிகாரி, இலங்கையின் மனித உரிமை சார்ந்த பொறுப்பதிகாரி மற்றும் சாட்சியங்களை சேகரிக்கும் அதிகாரிகளையும் இங்கு சந்திக்க முடிந்தது.

ஏக்கிய இராச்சிய அரசியல் அமைப்பை பாராளுமன்றுக்கு கொண்டு வந்து நிறைவேற்ற இருப்பதாக தெரிவித்தனர். ஏக்கிய இராச்சியவை திருத்தம் செய்துகொண்டு வரவுள்ளதாக மக்களுக்கும் சுவிஸ் அரசுக்கும் கூறியுள்ளனர்.

நாம் இவ்வாறு நடக்கும் என்று ஏற்கனவே கூறினோம். பிரதமர் ஹரிணி பாராளுமன்றுக்கு வெளியே புதிய அரசமைப்பை உருவாக்கும் நடவடிக்கை வெற்றி பெற்றுள்ளதாக தெரிவித்தார்.

அரசு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் புதிய அரசியல் அமைப்பை நிறைவேற்றும். சர்வஜன வாக்கெடுப்புக்கு விட்டு நிறைவேற்றப் பார்ப்பார்கள்.

தமிழ் அரசுக் கட்சியுடன் இது தொடர்பில் பேச முனைந்து வருகிறோம். பாராளுமன்றக் குழுவைத் தாண்டி கட்சியுடன் பேச நாம் முனைந்தோம். சி. வி.கே. சிவஞானத்தை சந்தித்த போது, ஏக்கிய இராச்சியவை நாம் நிராகரித்துள்ளோம் என்றும் அறிவித்தார்.

இதன் பின்னர் சுமந்திரன் அவசர அவசரமாக செயலாளராக வந்தார். இந்த பேச்சுகளை முறித்துக்கொண்டார். தமிழ்த் தேசிய தரப்பு ஒன்று கூடி பெரும்பான்மையைக் காட்டி ஓர் அழுத்தத்தைப் பிரயோகிக்க முடியும். ஏக்கிய இராஜ்ஜியவை எதிர்க்க வேண்டும். 13 ஐ பேசி மக்களை திசை திருப்பவேண்டாம். ஏக்கிய இராச்சியவுக்கு எதிராக வேலை செய்யவேண்டும். இது தோற்கடிக்கப்படவேண்டும். வரவிருக்கும் சர்வஜன வாக்கெடுப்பை தோற்கடிக்க தமிழ் மக்கள் முன் வரவேண்டும் - என்றார். (அ)

# தியாக தீபம் நினைவாக வவுனியாவில் அடையாள உண்ணாவிரத போராட்டம்


வவுனியா, செப். 26

தியாக தீபம் திலீபனின் 38 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு வவுனியாவில் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் வவுனியா மாநகர சபை முன்றலில் அமைந்துள்ள பொங்குதமிழ் நினைவுத் தூபியில் அமைக்கப்பட்ட தியாக தீபம் திலீபனின் நினைவு திடலில் இந்த உண்ணாவிரதப் போராட்டம் நேற்று இடம் பெற்றது.

இந்நிகழ்வில் தியாக தீபம் திலீபனின் திருவுருவ படத்துக்கு மலர் தூவி, தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் அடையாள உண்ணாவிரதமும் மேற்கொள்ளப்பட்டது.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், மாநகர மேயர் சு.காண்டீபன் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் சமையலறைக்கூடம் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், செப். 26

வடமராட்சி பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் நவீன வசதிகளுடன் கூடிய சமையலறைக் கூடம் நேற்று திறந்து வைக்கப்பட்டது. சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் திலக்.சீ. தனபால சமையலறைக் கூடத்தை திறந்து வைத்தார். நிகழ்வில் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அனைத்து பொலிஸ் நிலையத்தில் இருந்தும் பொலிஸ் பொறுப்பதிகாரிகள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். அத்துடன் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அனைத்து பொலிஸ் நிலையத்திற்கும் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபரால் பரிசுப் பொதிகள் வழங்கப்பட்டன. (அ)

# 1,006 பேர் கைது!

கொழும்பு, செப். 26

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட சிறப்பு நடவடிக்கையில் 1,006 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றச்செயல்களுடன் நேரடியாக தொடர்புடைய 31 நபர்களை பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர். மேலும், பிடியாணை உத்தரவு நிலுவையில் உள்ள 601 சந்தேக நபர்கள் இந்த நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

63 பேர் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டனர்.

மேலும், 20 பொறுப்பற்ற சாரதிகள் மற்றும் பல்வேறு போக்குவரத்து குற்றங்களை மீறிய 4,364 பேர் அடையாளம் காணப்பட்டனர். (அ)

# மாங்குளம் மத்திய பஸ் நிலையத்தை செயற்படுத்துவது குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், செப். 26

மாங்குளம் நகரில் அமைக்கப்பட்டுள்ள மத்திய பஸ் நிலையத்தை செயற்படுத்துவது தொடர்பில் ஆராயும் கலப்பயணமும் கலந்துரையாடலும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் நேற்று முன் தினம் புதன்கிழமை நடைபெற்றது.

மத்திய பஸ் நிலையத்தை ஆளுநர் மற்றும் அதிகாரிகள் குழுவினர் பார்வையிட்டனர். மத்திய பேருந்து நிலையத்துக்கு பேருந்துகள் வந்து செல்வதற்கான ஒழுங்குகள் எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும் என ஆராயப்பட்டது. அதற்கான சாத்தியமான வழிகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

தொடர்ந்து மாங்குளத்திலுள்ள வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தலைமை அலுவலக கேட்போர் கூடத்தில் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

மாங்குளம் வளர்ந்து வரும் நகரம் என்ற அடிப்படையிலும், எதிர்வரும் காலங்களில் அந்தப் பகுதியில் முதலீட்டு வலயம் அமையவுள்ளது என்பதையும் கருத்திலெடுத்து மாங்குளம் நகரத்துக்கான நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்ட வரைவை பெற்றுக்கொள்ளுமாறு ஆளுநர் அறிவுறுத்தினார். (அ)

## வைசாலியின் கை அகற்றிய விவகாரம்

# தாதிய உத்தியோகத்தருக்கு நாட்டைவிட்டு வெளியேற தடை

யாழ்ப்பாணம், செப். 26

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் காய்ச்சல் காரணமாக அனுமதிக்கப்பட்ட சிறுமிக்கு மருத்துவத் தவறால் மணிக்கட்டுடன் கை அகற்றப்பட்ட விவகாரத்தில் இரண்டாவது சந்தேக நபரான தாதிய உத்தியோகத்தர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், அவர் நாட்டை விட்டு வெளியேற முடியாத வகையில் பயணத் தடை விதிக்கப் பட்டுள்ளது.

கடந்த 2023 ஒகஸ்ட் மாதம் சாண்டில்யன் வைசாலி என்ற சிறுமி காய்ச்சலுக்குச் சிகிச்சை பெறுவதற்காக யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப் பட்டிருந்தார். அவருக்கு மணிக்கட்டில் கனுலா ஊசி மூலம் மருந்து செலுத்தப்பட்டது.

ஒரிரு நாள்களில் மணிக்கட்டு வீக்கமடைந்து பின்னர் அந்தப் பகுதி வெட்டி அகற்றப்பட்டது. இந்த விடயத்தில் மருத்துவத் தவறு நேர்ந்துள்ளதாக சிறுமியின் பெற்றோர் குற்றஞ்சாட்டியதுடன், பல்வேறு தரப்பினரிடம் தமக்கான நீதியையும் கோரியிருந்தனர்.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் உசைன் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு வந்தது. இதன்போது, பாதிக்கப்பட்ட தரப்பின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகளான செ. லக்சயன், கு. புரந்திரன் ஆகியோர் பல்வேறு விடயங்களை நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர். வழக்கின் விசாரணைகள் மந்த கதியில் இடம்பெறுகின்றன என்றும் அவர்கள் சுட்டிக் காட்டியிருந்தனர்.

முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை ஆராய்ந்த நீதிவான், இது தொடர்பான மேலதிக அறிக்கைகளை தாக்கல் செய்யுமாறும், விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் உரிய தரப்புக்கு உத்தரவிட்டிருந்தார்.

இதையடுத்து, குறித்த தாதிய உத்தியோகத்தர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். அத்துடன், அவர் நிபந்தனையுடனான பிணை வழங்கப்பட்டது. (எ-03)

# பலஸ்தீனத்தை ஆதரிக்கும் அநுர தமிழ் மக்கள் குறித்து ஒருபோதும் அலட்டிக்கொள்ளமாட்டார்!

## ஐக்கிய சோசலிச கட்சி கூறுகிறது

யாழ்ப்பாணம், செப். 26

பலஸ்தீனத்தை ஆதரிக்கும் அநுர தமிழ் மக்கள் தொடர்பில் ஒருபோதும் அலட்டிக்கொள்ளமாட்டார் என ஐக்கிய சோசலிச கட்சியின் முக்கியஸ்தர் சிறீதுங்க ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

அநுர அரசும் முன்னைய அரசுகளுக்கு நிகரான அரசுதான் என்பதை நிரூபித்து வருகின்றது எனவும் தேர்தல் மேடைகளில் கூறியவற்றை மறந்து மக்களை திசை திருப்பி தங்களின் ஆட்சியை கொண்டு செல்லவே பாடுபடுகின்றது என்றும் அவர் மேலும் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு கூறினார்.

மேலும், அநுர ஒரு சந்தர்ப்பவாதி, அமெரிக்கவின் நிகழ்ச்சி நிரலில் இருந்து நாட்டைச் சீர் குலைக்க... என்ன நினைக்கின்றதோ அதையே நாட்டில் அரசு முன்னெடுத்து வருகின்றது.

இதேநேரம் சர்வாதிகரம் கொண்ட அநுரவுக்கு நாட்டில் புரையோடிக் கொண்டிருக்கும் அரசியல் பிரச்னையை தீர்க்க ஒரு கையொப்பம் போதும். ஆனால், அதை அவர் செய்ய மாட்டார்.

யாழ். மக்களுக்கு சர்வதேச மைதானம் அவசியமாக இருந்தாலும் அதைவிட அவசியமானவை எண்ணற்ற அளவில் இருக்கின்றன. ஆனால் அநுர அரசு மைதானத்தை காட்டி தமிழ் மக்களின் பிரச்னைகளை மூடிமறைக்க முயல்கிறது.

வடக்கில் இருந்து பல பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றம் சென்றாலும் அவர்களில் ஒருவருக்குக்கூட அமைச்சர் பொறுப்புக் கொடுக்காத அரசு இது. வடக்கில் வந்து பேதங்கள் அற்ற ஆட்சி செய்வதாகக் கூறும் அநுர, தனது ஆட்சியில், அமைச்சரவையில் தமிழ், முஸ்லிம் சமூகங்களை ஓரங்கட்டி வைத்திருக்கின்றது.

இதேநேரம் யாழ்ப்பாணம் சாரா ஒருவரை யாழ்ப்பாணத்தின் அமைச்சராக்கி யாழ். மக்களை இழிவுபடுத்தி செயலே முன்னெடுக்கப்படுகின்றது. இதற்கு காரணம் இலங்கை தமிழர் ஒருவர் அமைச்சரானால் தமிழ் மக்கள் பிரச்னைகள் குறித்த தீர்வுக்கு குடைச்சல் கொடுப்பார் என்பதால் தான். இதுவே உண்மை.

பலஸ்தீனத்தை ஆதரித்து ஐ.நாவில் கருத்துக் கூறும் அநுர, இலங்கை தமிழ் மக்கள் தொடர்பில் ஒருபோதும் அலட்டிக்கொள்ளமாட்டார். ஏனெனில் அநுர ஓர் இனவாத குடும்பத்தின் பின்னணியில் இருந்து வந்தவர் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
26.09.2025 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், புரட்டாதி 10

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ரணிலின் நகர்வுகள் வெற்றியளிக்குமா?

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில், கைது செய்யப்பட்ட பின்னணியில் மீண்டும், எதிர்கட்சிகளை ஒருங்கிணைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார். தற்போதுள்ள சூழலில் முதலில் அவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியை தன் பக்கமாக இழுக்கவேண்டும். ஆனால், அதற்கு சஜித் பிரேமதாஸ அனுமதிக்கப் போவதில்லை. ஏனெனில், ஜனாதிபதித் தேர்தலின் போது யாரோ ஒருவர் விட்டுக்கொடுத்து ஒருவர் தேர்தலில் நின்றிருந்தால் அநுர குமாரவுக்கு சவாலைக் கொடுத்திருக்கலாம்.

அவ்வாறாதொரு கூட்டு ஏற்பட்டிருந்தால் பாராளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மையை தேசிய மக்கள் சக்தி பெற்றிருக்காது. ஆனால், அது நடக்கவில்லை. ஏனென்றால், ரணிலினதும் சஜித்தினதும் தன் முனைப்பு அவர்களை அனுமதிக்கவில்லை. இப்போதும் அதேநிலைமைதான் காணப்படுகிறது. சஜித் பிரேமதாஸ ரணிலுடன் இணைவதை அனுமதிக்கப் போவதில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில் சஜித் பிரேமதாஸ அணியிலிருக்கும் முக்கியநபர்களை தனிநபர்களாக அணுகவும் ரணில் முயற்சிப்பது போன்று தெரிகிறது. ஆனால், அது எந்தளவுக்கு சாத்தியம் என்பது தெரியவில்லை.

ரணில் என்னதான் முயற்சித்தாலும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்லும் நிலையில் அரசாங்கத்துக்கு எதிராக அனைவரையும் திரட்டுவது என்பது இயலாத காரியமாகும். ஏனெனில், அடிப்படையிலேயே ரணில் விக்கிரமசிங்க மக்கள் ஆதரவு உள்ள ஒருவர் அல்லர். அரசியல் அனுபவம்மிக்கவர், புத்திஜீவி, சர்வதேச முகமுள்ளவர் என்றெல்லாம் வர்ணிக்கப்பட்டாலும்கூட, அவரால் இன்றுவரையில் சாதாரண சிங்கள மக்களின் மனங்களை நெருங்க முடியவில்லை. இந்தநிலையில், ரணிலால் ஒரு பலமான எதிரணியைக் கட்டியெழுப்ப முடியுமா என்பது பெரிய கேள்வியாகவே இருக்கிறது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்தியாவுடனும் அமெரிக்காவுடனும் நெருங்கிச் செயல்பட முயற்சிக்கிறது. குறிப்பாக, இந்தியாவுடன் முரண்பட்டுக்கொண்டு செல்ல முயற்சிக்கவில்லை. அவர்களது இதுவரையான அணுகுமுறை அவ்வாறுதான் இருக்கிறது. ஒரு வேளை, நாளை மாற்றங்கள் ஏற்படலாம். ஆனால், இந்தியா தொடர்பில் நிதானமான பார்வை அவர்களிடம் இருப்பதாகவே தெரிகிறது. அதேவேளை, சீனாவுடனான உறவையும் பேணிப் பாதுகாக்கவேண்டும் என்னும் கணிப்பும் அவர்களிடம் இருப்பதாகவே தெரிகிறது.

அடிப்படையில் இந்தியா, அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய பிராந்திய மற்றும் உலக சக்திகளை சமநிலையில் அணுகுவது சிக்கலான விடயம். ஆனால், அதற்கான முயற்சியில் தங்களால் வெற்றி பெற முடியுமென்று தேசிய மக்கள் சக்தி கருதுகிறது. இந்த விடயத்தில் எங்காவது நெருக்கடிகள் தோன்றி அரசாங்கம் வெளித் தரப்புகளின் அதிருப்தியை சந்திக்கும்போதுதான் இலங்கையில் நெருக்கடிகள் ஏற்படும். அவ்வாறானதொரு நிலையில்தான், எதிரணிகளுக்கான வாய்ப்பும் கிடைக்கும். அவ்வாறானதொரு நிலையில் ரணிலின் தேவையை பலர் உணரக்கூடும். ஆனால், இவை நடக்குமா என்பதுதான் கேள்வி. இந்தநிலையில், ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சி முதலில் ஒரு பலமான எதிரணியை அவரது தலைமையின் கீழ், ஏற்படுத்த முடிந்தால் அதுஅவருக்கான முதல் வெற்றியாக இருக்கும். சஜித் பிரேமதாஸ அவரது தலைமையில் ஓர் அணியையெதிர் தரப்பாகப் பேணிக்கொள்வதில் வெற்றிபெறும் வரையில் ரணிலுக்கான வாய்ப்பு எட்டாக் கனிதான்.

# நீதிபதிகள் பதவி உயர்வு முறையில் மாற்றம் சிரேஷ்டத்துவம் புறக்கணிக்கப்படுகின்றதா?



கொழும்பு, செப். 26

நீதிபதிகளுக்கு பதவி உயர்வு வழங்கும் போது சிரேஷ்டத்துவத்தின் பிரகாரமே இது வரை காலமும் வழங்கப்பட்டு வந்துள்ளது. ஆனால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் அந்த முறைமை மாற்றப்பட்டு, புள்ளிகள் அடிப்படையில் பதவி உயர்வு வழங்கும்முறை பின்பற்றப்படுவதால், சிரேஷ்ட நீதிபதிகள் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. அதனால், இந்த விடயத்தில் நீதிபதிகளுக்கு அநீதி ஏற்பட்டுள்ளதா என தேடிப்பார்க்க தெரிவுக்குழு அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற தண்டனை சட்டக்கோவை (திருத்த) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மேல் நீதிமன்றங்களுக்கு 16 நீதிபதிகள் பதவி உயர்வு வழங்கி நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இவர்கள் அனைவரும் நீதிமன்ற ஆணைக்குழுவி னால் நடத்தப்பட்ட நேர்முகப்பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையிலேயே நியமிக்கப்பட்டுள்ளனர். நேர்முகப்பரீட்சை நடத்த நீதிமன்ற ஆணைக்குழுவினால் 3 உறுப்பினர்கள் நியமிக்கப்படவேண்டும்.

ஆனால் இரண்டு உறுப்பினர்களே இந்த நேர்முகப்பரீட்சையை நடத்தியுள்ளனர். 3ஆவது உறுப்பினரை நியமிக்காமல் ஏன் இந்த நேர்முகப் பரீட்சையை நடத்தவேண்டும் என்ற கேள்வி எழுகிறது. நேர்முகப்பரீட்சை இடம்பெற்ற பின்னரே 3ஆவது உறுப்பினர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் பதவி உயர்வு வழங்கும் பெயர்ப் பட்டியலில் 252 பேரின் பெயர்கள் உள்ளன. அதில் ஆரம்பநிலையில் இருக்கும் 35பேரில் இருந்தே 16பேர் புள்ளிகள் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். ஆனால் இந்தப் பட்டியலில் முதல் 3 நிலையில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு இல்லை. அவர்கள் நீதிச்சேவையில் பல வருடங்கள் அனுபவமுள்ளவர்கள். அதேநேரம் பட்டியலில் 33ஆவது இடத்தில் இருப்பவருக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டிருக்கிறது. அவர்தான் அண்மையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்ய உத்தரவிட்ட நீதிபதி. இது எவ்வாறு சாத்தியமாகும்.

அதேபோன்று நீதிபதிகளுக்கு இடமாற்றம் வழங்கும் போதும் இவ்வாறான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சிரேஷ்டத்துவத்தின் பிரகாரம் இடமாற்றம் வழங்கப்படவில்லை. கொழும்பில் இருக்கும் நீதிமன்றங்களுக்கு சிரேஷ்ட நிலையில் இருக்கும் நீதிபதிகளே இடமாற்றம் வழங்கப்படும்.

ஆனால், நீதிச்சேவை ஆணைக்குழுவின் இடமாற்ற பட்டியலில் 106 பேரின் பெயர் இடம்பெற்றிருக்கிறது. அதில் பட்டியலில் பின்வரிசையில் இருக்கும் சிலர் சிரேஷ்ட நீதிபதிகளை பின்தள்ளிவிட்டு, இடமாற்றம் வழங்கப்பட்டிருக்கிறது. அப்படியானால் நீதிபதிகளுக்கு எந்த அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன என்ற விடயம் தொடர்பில் கேள்வி எழுகிறது-என்றார். (அ)

# ஆயிரம் ஆரம்ப சுகாதார மையங்களை நாடெங்கும் நிறுவுவதற்கு அரசு திட்டம்!

கொழும்பு, செப். 26

சிறந்த கண்ணியத்துடன் கூடிய சுகாதார சேவையின் உச்ச பலனை நாம் இலகுவாக பெற்றுக்கொள்வதை உறுதி செய்வதற்காக, சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் கீழ், புதிய அரசாங்கத்தின் சுகாதாரக் கொள்கையின் முதல் கட்டமாக நாடு முழுவதும் ஆயிரம் ஆரம்ப சுகாதார மையங்களை நிறுவ சுகாதார மற்றும் ஊடக அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ், இந்த ஆண்டு நூறு ஆரம்ப சுகாதார மையங்கள் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

மக்களுக்கு எளிதில் அணுகக்கூடிய இடத்திலும் நிறுவப்படும் இந்த ஆரம்ப சுகாதார மையங்கள், ஆரோக்கியத்திற்கான மையங்கள் என்று விசேடமாக அடையாளப்படுத்தப்படவுள்ளன. அதன்படி காலி, இரத்தினபுரி, களுத்துறை, கண்டி மற்றும் மாத்தளை ஆகிய ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கிய ஐந்து சுகாதார மற்றும் நல்வாழ்வு மையங்கள் இன்று,நாளை, நாளை மறுதினம் மற்றும் ஒக்ரோபர் 2 ஆகிய திகதிகளில் பொதுமக்களின் பாவனைக்காக நிறுவப்படவுள்ளன.

சுகாதார மற்றும் நல்வாழ்வு மையத் திட்டத்தின் முதல் மையமான காலி மாவட்டத்தில் உள்ள மாபலகம சுகாதார மற்றும் நல்வாழ்வு மையம் இன்று பொது மக்களுக்குத் திறக்கப்படவுள்ளது.

இந்த மையங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு குடும்ப மருத்துவர், ஒரு சமூக சுகாதார செவிலியர் மற்றும் ஒரு ஒருங்கிணைப்பு அதிகாரி உள்ளிட்ட ஒரு சுகாதார குழு இணைக்கப்படவுள்ளது.

இந்த மையங்கள் மூலம் அந்தப் பகுதிகளிலும், அந்தப் பகுதிகளில் வசிக்கும் மக்களிடையே காணப்படும் சுகாதாரப் பிரச்னைகளைத் தீர்ப்பதே பிரதான நோக்கமாகும். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்ரெம்பர் - 26 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம் - புரட்டாதி 10
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : பஞ்சமி




**மேடம்**
பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. வாகனத்தை சீர் செய்வீர்கள். உத்தியோகத்தில் தைரியமாக முடிவுகள் எடுப்பீர்கள். நன்மை கிட்டும் நாள்.

**இடபம்**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். அதிகார பதவியில் இருப்பவர்களின் அறிமுகமும் கிடைக்கும். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உங்கள் கை ஓங்கும்.

**மிதுனம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். நட்பு வட்டம் விரியும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும்.

**கடகம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். வியாபாரத்தில் லாபம் கணிசமாக உயரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும்.

**சிம்மம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். துணிச்சலுடன் செயல்பட வேண்டும்.

**கன்னி**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். மனசாட்சி படி செயல்படும் நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே முடிப்பது நல்லது. வியாபாரத்தில் லாபம் மந்தமாக இருக்கும். பேச்சில் இங்கிதம் தேவைப்படும்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் மனஸ்தாபம் நீங்கும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம்.

**தனுசு**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பிள்ளைகளின் பொறுப்புணர்வுகளை பாராட்டுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்துக் கொள்வீர்கள். மதிப்புக் கூடும் நாள்.

**மகரம்**
சொந்த பந்தங்கள் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள். சாதிக்கும் நாள்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையும் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். வியாபாரத்தில் போட்டிகள் இருக்கும். உத்தியோகத்தில் கவனம் செலுத்துவது நல்லது.

# உற்பத்தித் திறன் மூலம் வளமான கிராமம்: அரச உத்தியோகத்தர்களுக்கு செயலமர்வு

யாழ்ப்பாணம், செப். 26

வடமாகாண உற்பத்தித் திறன் உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கே. சிவகரன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தச் செயலமர்வில் கருத்து தெரிவித்த மேலதிக அரசாங்க அதிபர் கூறுகையில், அரசாங்கத்தின் கொள்கைத் திட்டத்துக்கு அமைய வளமான நாடு - செழிப்பான பிரதேசத்தை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் கிளீன் சிறீலங்கா தேசிய திட்டத்தின் கீழ் இலங்கை முழுவதும் சமூக உற்பத்தித்திறன் மாதிரி கிராமங்களை உருவாக்குவதற்காக முதற்கட்டமாக ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவில் ஒரு கிராமம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான மூன்றாண்டு செயல்பாட்டுத் திட்டத்தை தயாரிக்க வேண்டும். மேலும், தெரிவு செய்யப்பட்ட கிராமத்தில் கல்வி, பொருளாதாரம், சுகாதாரம் மற்றும் உடல்நலம், வீட்டு முகாமை மற்றும் சமூக நல்வாழ்வு, கலாசார மற்றும் ஆன்மீக அபிவிருத்தி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றின் ஊடாக அக் கிராமங்களை உற்பத்தித் திறன் ஊடாக அபிவிருத்தி செய்வதே நோக்கம். வறுமை ஒழிப்பு மற்றும் டிஜிற்றல் மயமாக்கலையும் உள்ளடக்கியவகையில் உற்பத்தித் திறன் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்களை சிறப்பாக நிறைவேற்றி ஒத்துழைப்பு வழங்க வேண்டும்- என்றார்.

இந்தத் திட்டத்தின் நோக்கம் பற்றி உற்பத்தித் திறன் செயலகத்தின் உதவிப் பணிப்பாளர் தர்ஷினி ரணசிங்கவால் விவரிக்கப்பட்டது.

இதன் ஆரம்ப நிகழ்வில் உதவி மாவட்டச் செயலாளர் உ. தர்சினி, யாழ்ப்பாணம் மாவட்ட உற்பத்தித் திறன் இணைப்பாளர் எஸ். பிரசாத் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட உற்பத்தித் திறன் இணைப்பாளர் ஆர். புவனேந்திரன் ஆகியோரும் பங்குபற்றினர்.

இந்தச் செயலமர்வில் வடமாகாணத்தைச் சேர்ந்த உற்பத்தித் திறன் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

(எ)

# யாழ். மாவட்ட மகளிர் விவகார குழுக்களின் சம்மேளன கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும்

யாழ்ப்பாணம், செப். 26

யாழ். மாவட்ட மகளிர் விவகாரக்குழுக்களின் சம்மேளன பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும் யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கே. சிவகரனின் பங்குபற்றுதலுடன் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கூறுகையில், சமூக சேவையாக கடமையாற்றும் அனைவரும் ஒன்றாக இணைந்து செயல்படுவதன் மூலமே பல்வேறுபட்ட செயல் திட்டங்களை முன்னெடுக்க முடியும். இதற்காக பிரதேச மட்ட குழுக்களுக்கு ஊடாக இந்த மாவட்ட மட்ட சம்மேளனம் அமைக்கப்பட்டு பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், மகளிர் விவகார சம்மேளனம் புதிய செயல் திட்டங்களை முன்வைத்து அனைவரும் இணைந்து சேவையாற்ற வேண்டும்- என்றார்.

இந்தக் கூட்டத்தில் செயலாளரால் சென்ற கூட்டறிக்கை மற்றும் செயல்பாட்டறிக்கை வாசிக்கப்பட்டதுடன், பொருளாளரால் கணக்கறிக்கையும் வாசிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, புதிய நிர்வாக சபைத் தெரிவு செய்யப்பட்டது. புதிய நிர்வாக சபையின் தலைவராக திருமதி மதனரூபி நிரோஷானந்தும் செயலாளராக திருமதி விசாலினி செல்வகுமார், பொருளாளராக திருமதி சர்மிளா அருண்பாபுவையும் உள்ளடக்கியவகையிலும்15 பிரதேச செயலகத்தை பிரதிநிதித்துவப்படுத்தி ஏனைய நிர்வாக சபை அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இதில், யாழ். மாவட்ட உதவிச் செயலாளர் உ. தர்சினி, மாவட்ட பெண்கள் அபிவிருத்தி இணைப்பாளர் திருமதி கி. தயாபரி, மாவட்ட உளவளத்துணை அபிவிருத்தி இணைப்பாளர், பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், யாழ். மாவட்ட மகளிர் சம்மேளன உறுப்பினர்கள் மற்றும் அங்கத்தவர்கள் கலந்துகொண்டனர்.

(எ)

# மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் திண்மக் கழிவகற்றல் தொகுதி திறப்பு

யாழ்ப்பாணம், செப். 26

மூளாய் சைவப் பிரகாச வித்தியாலயத்தில் நேற்றையதினம் திண்மக் கழிவகற்றல் தொகுதி திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது விருந்தினர்களுக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தலைமையுரை, விருந்தினர்களின் உரைகள் நடைபெற்றன. தொடர்ந்து, திண்மக் கழிவகற்றல் தொகுதி திறந்து வைக்கப்பட்டது.

அதிபர் பா. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந்தத் திறப்பு விழாவில், பிரதம விருந்தினராக வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் சண்முகநாதன் ஜயந்தனும் சிறப்பு விருந்தினர்களாக பழைய மாணவர் ஜெ. ஜெயச்சந்திரனும் எழுக மூளாய் மறுமலர்ச்சி மையத்தின் பிரதிநிதி ப. புருசோத்தமனும் கலந்து சிறப்பித்துடன், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்த திண்மக் கழிவகற்றல் தொகுதியை திறந்து வைப்பதற்கு எழுக மூளாய் மறுமலர்ச்சி மன்றம் நிதி அனுசரணை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

(எ-05)

# பிள்ளைகளுக்கான கதை சொல்லல் போட்டி

யாழ்ப்பாணம், செப். 26

யாழ்ப்பாணம் மாவட்ட தேசிய கலை இலக்கியப் பேரவையும் காலையடி மறுமலர்ச்சி மன்ற நூலகமும் இணைந்து நடத்தும் ஈழத் தமிழ்ச் சிறுவர் இலக்கியப் பெருவிழா நிகழ்வின் முன்னோடி நிகழ்வாக இடம்பெறுகின்ற சிறுவர் படைப்பாக்கப் போட்டிகளின் ஒரு பகுதியாக 10 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கான கதை சொல்லல் போட்டி அடுத்த மாதம் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கு பண்டத்தரிப்பில் உள்ள மறுமலர்ச்சி மன்றத்தில் நடைபெறவுள்ளது.

இப் போட்டியில் பிள்ளைகளுடைய வயதுப் பிரிவுகளுக்கு ஏற்ப புள்ளிகள் வழங்கப்பட்டுப் பரிசில்கள் 18.10.2025 அன்று மாலை மறுமலர்ச்சி மன்றத்தில் நடைபெறவுள்ள ஈழத் தமிழ்ச் சிறுவர் இலக்கியப் பெருவிழாவில் வைத்து வழங்கப்படும். இப் போட்டியில் பங்குபற்றுவதற்கான விண்ணப்பங்கள் முழுப் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், பிறந்த திகதி, கற்கும் தரம், கல்வி கற்கும் பாடசாலை, பங்குபற்றும் போட்டி ஆகிய விவரங்கள் அடங்கியதாகச் சுயமாகத் தயாரிக்கப்பட்டு 03.10.2025 ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாக திங்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் மாலை 03.00 - 06.00 மணி வரையான காலப்பகுதிக்குள் மறுமலர்ச்சி மன்ற நூலகத்தில் வழங்கவோ, தபாலில் மறுமலர்ச்சி மன்றம், காலையடி, பண்டத்தரிப்பு, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவோ வேண்டும். மேலதிக விவரங்களுக்கு ச. தனுஜனை 0770027621, 0718473926 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்புகொள்ளவும்.- இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் கடத்தலை தடுக்க அனைவரதும் ஒத்துழைப்பு அவசியம்!

## பிரதமர் ஹரிணி அமரசூரிய



கொழும்பு, செப். 26

**இந்தியக் கடல் பரப்பில் சட்டவிரோத நடவடிக்கைகளை எதிர்த்துப் போராடுவதற்கும், போதைப்பொருள் கடத்தலைத் தடுத்து நிறுத்துவதற்கும் அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியமாகும் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருவதுடன் போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கைகளை அமுல்படுத்தியுள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

இந்தியக் கடல் பரப்பின் கடல்சார் நோக்கு' என்ற தொனிப் பொருளில் இலங்கை கடற்படையால் 12ஆவது தடவையாகவும் ஏற்பாடு செய்யப் பட்ட 'காலி கலந்துரையாடல் 2025 சர்வதேச கடல்சார் மாநாட்டில் உரையாற்றும்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பல வருடங்களாக, இந்த கலந்துரையாடல் இந்தியக் கடல் பரப்பின் எதிர்காலம் குறித்த விவாதங்களுக்கான சர்வதேச தளமாக இருந்து வருகின்றது. இந்தியக் கடல் பரப்பானது உலகின் மிகவும் முக்கியமான மூலோபாய நன்மையைக் கொண்ட கடல் பரப்புகளில் ஒன்றாகும்.

இந்தியக் கடல் பரப்பானது அமைதி, பாதுகாப்பு, நிலையான தன்மை, நீதி மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் நிர்வாகிக்கப்படும் ஒரு பிரதேசமாக மாற்றுவதற்கு அனைத்து பங்குதாரர்களுடனும் இணைந்து பணியாற்றுவதே எமது நோக்கமாகும். நவீன உலகின் கடல் பரப்பானது முன் ஒருபோதும் இல்லாத சவால்களை எதிர் கொண்டுள்ளது.

காலநிலை மாற்றம், கடல் மட்ட உயர்வு, அதிகப்படியான மீன்பிடித்தல் மற்றும் சுற்றுச்சூழல் மாசடைதல் ஆகியவை உயிரினப்பன்மை, மனிதப் பாதுகாப்பு மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தலாக அமைந்திருக்கின்றன. கடல் சூழலைப் பாதுகாப்பது நமது தேசிய இருப்புக்கு இன்றியமையாததாகும், அதனாலேயே நாம் வலுவான பாதுகாப்பு கட்டமைப்பு, கடல் பாதுகாக்கப்பட்ட பகுதிகளை விரிவுபடுத்துதல் மற்றும் நாடுகளுக்கிடையேயான ஒத்துழைப்பு ஆகியவற்றை ஆதரிக்கின்றோம்.

தேசியப் பாதுகாப்பு மற்றும் பொதுச் சுகாதாரத்தை உறுதிப்படுத்த அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகின்றது. அதேபோன்று, போதைப்பொருள் கடத்தலை எதிர்த்துப் போராட அரசாங்கம் ஏற்கனவே தடுப்பு நடவடிக்கைகளை அமுல்படுத்தி வருகிறது. போதைப்பொருள் மற்றும் கடத்தல்காரர்களைக் கைது செய்வதற்கான தினசரி ரோந்து சேவை, ஆய்வுகள் மற்றும் புலனாய்வு தகவல்களின் அடிப்படையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றின் மூலம் நமது மக்களையும் கடல் பரப்பையும் பாதுகாக்க இலங்கை கடற்படை புரியும் அர்ப்பணிப்பைப் பாராட்ட இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்- என்றார். (அ)

# கேபிள் கார் விபத்தில் 7 பிக்குகள் உயிரிழப்பு!

## ஆறு பிக்குகள் காயம்!!

கொழும்பு, செப். 26

மெல்சிறிபுர-பன்சியகம பகுதியில் உள்ள நா உயன ஆரண்ய சேனாசனத்தில் பௌத்த பிக்குகளை ஏற்றிச் செல்லும் கேபிள் கார் அறுந்து விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் குறித்த போக்குவரத்தில் ஈடுபட்ட ஏழு பிக்குகள் உயிரிழந்துள்ளனர்.

அதேநேரம், காயமடைந்த ஆறு பிக்குகள் குருநாகல் போதனா வைத்தியசாலை மற்றும் பொல்கஹவெல வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த துறவிகளில் மூன்று வெளிநாட்டுத் துறவிகளும் நான்கு இலங்கைத் துறவிகளும் அடங்குவதாக பன்சியகம பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அவர்கள் ருமேனியா, ரஷ்யா மற்றும் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது கேபிள் காரில் 13 பிக்குகள் இருந்ததாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வன மடத்தில் தற்போது பல வெளிநாட்டுத் துறவிகள் வசித்து வருவதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு கூறுகிறது.

துறவிகள் கேபிள் காரில் ஏறி மலை உச்சியில் உள்ள தியான பீடங்களுக்கு செல்ல புறப்பட்ட போது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து பன்சியாகம பொலிஸார் மேலும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# வாகன விபத்தில் கான்ஸ்டபிள் பலி!

கொழும்பு, செப். 26

நிட்டம்புவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரிவுக்குட்பட்ட கொழும்பு - கண்டி பிரதான வீதியில் நம்புலுவ சந்திக்கு அருகில், கொழும்பிலிருந்து கண்டி நோக்கி பயணித்த டிப்பர், எதிர் திசையில் இருந்து வந்த மோட்டார் சைக்கிள் மீது மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் மோட்டார் சைக்கிள் சாரதி பலத்த காயமடைந்து வத்துபிட்டிவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் வரக்காபொல, மஹேனகமவைச் சேர்ந்த 33 வயதுடைய பொலிஸ் கான்ஸ்டபிள் என தெரியவந்துள்ளது.

சடலம் வத்துபிட்டிவல வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

டிப்பர் சாரதி, பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நிட்டம்புவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# வான்-லொறி மோதி நால்வர் உயிரிழப்பு!

கொழும்பு, செப். 26

குருநாகல்-அநுராதபுரம் பிரதான வீதியின் தலாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வான் ஒன்றும், லொறியொன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்து தலாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மொரகொட பகுதியில் நேற்று அதிகாலை 04.50 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் நால்வர் உயிரிழந்துள்ளதாக தலாவ பொலிஸார் உறுதிபடுத்தியுள்ளனர்.

உயிரிழந்தவர்கள் அனைவரும் வானில் பயணித்தவர்கள் ஆவர்.

விபத்தில் மேலும், மூவர் காயமடைந்தும் உள்ளனர்.

அவர்கள் தற்சமயம் சிகிச்சைக்காக அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம் லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவரும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை தலாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# பூரணமற்ற தகவல்களை வெளியிட்டு குழப்பத்தை தோற்றுவிக்கவேண்டாம்!

## அரசைக் கோருகிறது பொதுஜன பெரமுன

கொழும்பு, செப். 26

பூரணமற்ற தகவல்களை வெளியிட்டு சமூகத்தில் தேவையற்ற குழப்பத்தை தோற்றுவிக்கவேண்டாம் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான்ன தெரிவித்துள்ளார்.

ஊழல் ஒழிப்பு தொடர்பான அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க நாமும் தயாராகவே உள்ளோம் என்றும் அவர் கூறினார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஊழல் ஒழிப்பு தொடர்பான அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க நாமும் தயாராகவே உள்ளோம். அரசாங்கத்தின் இநத்தகைய செயற்பாடுகள் அவர்களுக்கு அரசியல் இலாபத்தை பெற்றுக் கொடுக்கும்.

எது எவ்வாறாக இருப்பினும், அரசாங்கம் இந்த விசேட நடவடிக்கைகளின்போது பின்னணியில் உள்ளவர்கள் குறித்து அவர்கள் வெளியிடும் பூரணமற்ற தகவல்கள் சமூகத்தில் தேவையற்ற குழப்பத்தை தோற்றுவிக்கும் வகையில் அமைந்துள்ளது.

ஆகவே இத்தகைய விடயத்தை மேற்கொள்ளவேண்டாம் என தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுவோர் மற்றும் பாதாளக் குழுகள் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்துங்கள். ஆனால் பூரணமற்ற தகவல்களை வெளியிடவேண்டாம் என தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

தகவல்கள் உறுதிப்படுத்தப்படாமல் வெளியிடப்படும் போது சமூகத்திலும் அரசியலிலும் குழப்பம் ஏற்படும் நிலை உருவாகியுள்ளது-என்றார். (அ)

# நிஷாந்த உலுகேதென்னவின் விளக்கமறியல் காலம் நீடிப்பு!

கொழும்பு, செப். 26

முன்னாள் கடற்படைத் தளபதி நிஷாந்த உலுகேதென்னவை எதிர்வரும் ஒக்ரோபர் 8 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு பொல்கஹவெல நீதவான் நீதிமன்றம் நேற்று முன் தினம் உத்தரவிட்டுள்ளது.

கடற்படைப் புலனாய்வுப் பணியகத்தில் பதவியில் இருந்த போது, பொத்துஹெரவைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் காணாமல்போனமை தொடர்பான குற்றச்சாட்டில், நிஷாந்த உலுகேதென்ன கடந்த ஜூலை மாதம் 28 ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உலக நாடுகளின் தலைவர்களை சந்தித்துப் பேசினார் அநுரகுமார



கொழும்பு, செப். 26

அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் இடையேயான இருதரப்பு பேச்சுவார்த்தைகள் நியூயோர்க் நகரின் ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி அலுவலகத்தில் இடம்பெற்றன.

இதன்போது, இலங்கை-பாகிஸ்தான் நீண்டகால நட்புறவை மேலும் வலுப்படுத்தி, இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் ஆஸ்திரேலிய பிரதமர் அந்தோனி அல்பனீஸ் இடையேயான இருதரப்பு பேச்சுவார்த்தை நியூயோர்க் நகரின் ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இலங்கை மற்றும் ஆஸ்திரேலியாவுக்கு இடையில் நிலவும் பொருளாதார மற்றும் வர்த்தக ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்தி, இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.


தொடர்ந்து ஜனாதிபதி அநுரகுமார மற்றும் போர்த்துக்கல் ஜனாதிபதி மார்செலோ ரெபெலோ டி சூசா இடையேயான இரு தரப்பு பேச்சுவார்த்தை நியூயோர்க் நகரின் ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இரு தலைவர்களுக்கும் இடையிலான சுமுகமான பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் இரு தரப்பு கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரையம்பதி பேருந்து தரிப்பிடத்தில் கூரையின்றி அவதியுறும் பயணிகள்

## அதிகாரிகள் மீது பொதுமக்கள் விசனம்



ஆரையம்பதி, செப். 26

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியிலுள்ள ஆரையம்பதி பாலமுனை சந்தியில் அமைக்கப்பட்டுள்ள பேருந்து தரிப்பு நிலையத்துக்கு கூரைத் தகடுகள் இல்லாமையால் குறித்த தரிப்பு நிலையத்தில் பேருந்துக்காக காத்திருக்கும் பயணிகள் சுட்டெரிக்கும் வெயிலில் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கிவருவதாகவும் இந்த பேருந்து தரிப்பு நிலைய கூரை இல்லாமல் இருப்பது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கண் இல்லையா? என பொதுமக்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

குறித்த பேருந்து தரிப்பு நிலையத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தின் மேற் கூரைக்கு பிளாஸ்ரிக் கண்ணாடியிலான கூரை உடைந்து முற்று முழுதாக இல்லாமல் போயுள்ளது. இந்த நிலையில் பேருந்துக்காக காத்திருக்கும் பொதுமக்கள் வெயிலில் நிக்கமுடியாது பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இந்த பேருந்து தரிப்பு நிலைய கூரை கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக இல்லாமல் போயுள்ளது. இருந்தும், துறைசார் அதிகாரிகள் இதுவரையும் உரிய நடவடிக்கை எடுக்காது என்ன செய்து கொண்டிருக்கின்றனர்? மக்களின் வரிப்பணத்தில் சம்பளம் பெற்றுக் கொள்ளும் இந்த உத்தியோகத்தர்களே சம்பந்தப்பட்ட திணைக்களங்களே மக்களுக்கு சேவை செய்யாது யாருக்காக வேலை செய்கின்றனர்?என கடும் விசனம் தெரிவித்தனர். (எ)

# பிரசவித்த குழந்தை மரணம் சுகாதார சிற்றூழியர் கைது

மட்டக்களப்பு, செப். 26

மட்டக்களப்பு போதனா மருத்துவமனையின் சத்திர சிகிச்சை பிரிவின், மலசல கூடத்தில் குழந்தையை பிரசவித்து, அந்தக் குழந்தையை கட்டிலின் கீழ் மறைத்து வைத்திருந்த 35 வயதுடைய இரு பிள்ளைகளின் தாயான சுகாதார சிற்றூழியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தன்று அதாவது கடந்த 22 ஆம் திகதி அவர் வழமைபோல் மருத்துவமனையில் கடமையாற்றி வந்தார். இதன் போது, வயிற்று வலி ஏற்பட்டதால் அங்குள்ள மலசல கூடத்துக்குச் சென்று, யாருக்கும் தெரியாமல் ஒரு பெண் குழந்தையைப் பிரசவித்தார்.

பிறகு அக்குழந்தையை பெட்டி ஒன்றில் மூடி, கட்டிலின் கீழ் மறைத்து வைத்துவிட்டு, தனது கடமைகளைத் தொடர்ந்தார்.

இந்த நிலையில், அவருக்கு இரத்தப்போக்கு அதிகரித்ததை அவதானித்த தாதியர் ஒருவர், அவரை விடுதியில் அனுமதிக்கச் செய்தார்.

அங்கு சோதனை செய்த மருத்துவர்கள், அவர் குழந்தை பெற்றுள்ளதை கண்டறிந்தனர்.

இதனையடுத்து, தேடியபோது, பெட்டியில் போடப்பட்டு கட்டிலின் கீழ் மறைக்கப்பட்டிருந்த குழந்தை, உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டது.

இந்த சிற்றூழியரின் கணவரும் குறித்த மருத்துவமனையில் சிற்றூழியராக கடமையாற்றி வருகிறார்.

இருவருக்கும் இடையே ஏற்பட்ட மனக்கசப்பு காரணமாக, கணவன் கடந்த ஜூன் மாதத்திலிருந்து பிரிந்து வாழ்ந்து வருகிறார்.

இந்த நிலையில், குறித்த பெண் கர்ப்பம் தரித்திருந்தது மருத்துவமனையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கோ அல்லது யாருக்கோ தெரியவில்லை.

38 வாரங்கள் முழுமையான கர்ப்பத்தில், 2 கிலோ 485 கிராம் எடையுள்ள பெண் குழந்தையை அவர் பிரசவித்திருந்தார்.

இந்தச் சம்பவத்தையடுத்து, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் அவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (எ)

# ஐஸ் போதைப்பொருளுடன் தந்தை, மகன் கைதாகினர்

மட்டக்களப்பு, செப். 26

மட்டக்களப்பு நகரில் ஐஸ் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட கருவப்பங்கேணியைச் சேர்ந்த 22 வயது இளைஞன் மூன்று வாரங்களுக்கு முன் கைது செய்யப்பட்ட நிலையில், அதே பகுதியில் 21 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் அவரது தந்தையும் கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் நிலையப் பெரும் குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரி ஜெயசிங்கவுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து, பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரியின் வழிகாட்டலில் நகரிலுள்ள கண்ணகை அம்மன் கோவில் வீதியில் மாறுவேடத்தில் பொலிஸார் கண்காணிப்பில் ஈடுபட்ட னர்.

இதன்போது பை ஒன்றுடன் நடந்து வந்த குறித்த நபரை பொலிஸார் சுற்றி வளைத்து மடக்கிப் பிடித்து சோதனை செய்தனர். இதில், வியாபாரத்துக்காக எடுத்துச் செல்லப்பட்ட 21 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் அவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் கருவப்பங்கேணியைச் சேர்ந்த 49 வயது நபர் எனவும் இவரது 22 வயது மகன் மற்றும் லயன்ஸ் கிளப் வீதியைச் சேர்ந்த 24 வயது இளைஞர் ஆகியோர் மூன்று வாரங்களுக்கு முன் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ளனர் எனவும் தெரியவந்தது.

இந்த நிலையில், கைது செய்யப்பட்ட தந்தையை பொலிஸார் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது, அவரை இன்று 26 ஆம் திகதி வரை பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய நீதிவான் உத்தரவிட்டார். (எ)

# விறகு சேகரிக்க சென்றவர் சடலமாக மீட்பு

லிந்துலை, செப். 26

நுவரெலியா, லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வலகா தோட்டத்தில் விறகு சேகரிக்கச் சென்ற குடும்பஸ்தர் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான 75 வயதுடைய கிருஷ்ணசாமி என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் பிற்பகல் தேயிலை மலைப் பகுதிக்கு விறகு வெட்டச் சென்று இரவு வரை வீடு திரும்பாத நிலையில் பிரதேச மக்கள் காட்டு பகுதிகளில் தேடியுள்ளனர்.

இவ்வாறு அதிகாலை வரை மேற்கொண்ட தேடுலின் பின்னர் நேற்றுக் காலை தேயிலை மலைப்பகுதியில் சடலமாக மீட்கப்பட்டார். (எ)

# தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் இன்று

திருகோணமலை, செப். 26

தியாக தீபம் திலீபனின் இறுதி நாள் நினைவேந்தல் நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் புதன்கிழமை திருகோணமலை - சம்பூர் ஆலங்குலம் மாவீரர் துயிலுமில்லம் நினைவேந்தல் ஏற்பாட்டு குழுவினரின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

தியாகி திலீபனின் 38ஆவது நினைவேந்தலை மாவட்டம் தழுவிய ரீதியில் இன்று 26 ஆம் திகதி நடத்துவது தொடர்பில் இதன்போது கலந்தாலோசிக்கப்பட்டது.

இதில் சிவில் சமூக செயல்பாட்டாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இது குறித்து நினைவேந்தல் ஏற்பாட்டு குழுவின் தலைவர் க. பண்பரசன் தெரிவிக்கையில், 1987ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கும் போது இந்திய அமைதி காக்கும் படையினரால் இலங்கையில் ஏற்பட்ட அட்டூழியங்களுக்கு எதிராக நல்லூர் கந்தசாமி கோவில் முன்றலில் உண்ணாவிரதம் இருந்து தனது உயிரை தமிழினத்துக்காக தியாகம் செய்த திலீபனின் 38 ஆவது நினைவேந்தல் நிகழ்வை உணர்ச்சி பூர்வமாக முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி, திருகோணமலை குளக்கோட்டன் மண்டபத்தில் இன்று நினைவேந்தல் நடைபெறும். இதில் அனைத்து மக்களையும் கலந்து கொள்ளுமாறு ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லம் ஏற்பாட்டு குழு சார்பாக அழைக்கிறோம்- என்றார்.

# 7 வயது சிறுமி துஷ்பிரயோகம் சிறிய தந்தைக்கு கடூழிய சிறை

## மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பு

மட்டக்களப்பு, செப். 26

மட்டக்களப்பு மாவட்டத்தில் 2007ஆம் ஆண்டில் 7 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைதான, பாதிக்கப்பட்ட சிறுமியின் சிறிய தந்தைக்கு சிறைத் தண்டனையும் அபராதமும் விதித்து மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரி. ஜே. பிரபாகரன் தீர்ப்பளித்தார்.

இதன்படி, குறித்த நபருக்கு அவர் செய்த முதலாவது குற்றத்துக்கு 2 வருட கடூழியச் சிறைத் தண்டனையும் 10 ஆயிரம் ரூபாய் அபராதமும் இரண்டாவது குற்றத்துக்கு 7 வருட கடூழியச் சிறைத் தண்டனையும் 10 ஆயிரம் ரூபாய் அபராதமும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 2 இலட்சம் ரூபாய் நஷ்ட ஈடும் வழங்குமாறு தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

2007இல் 7 வயது சிறுமியின் தந்தையின் சகோதரனான 32 வயதுடைய சிறிய தந்தை, அச்சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதையடுத்து, அவரை பொலிஸார் கைது செய்தனர்.

இதனையடுத்து, அவர் சிறையில் அடைக்கப்பட்டு பின்னர் நீதிமன்ற பிணையில் வெளிவந்த நிலையில், அவருக்கு எதிராக மேல் நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, வழக்கு இடம்பெற்று வந்தது.

குறித்த நபர், 16 வயதுக்கு உட்பட்ட சிறுமியை கடத்திச் சென்றமை, பாலியல் துஷ்பிரயோகம் செய்தமை ஆகிய இரு குற்றச்சாட்டுகள் சாட்சியங்கள், சான்றுப் பொருட்கள் மற்றும் சட்ட வைத்தியர் அறிக்கை மூலம் நிரூபிக்கப்பட்டு, அந்த நபர் குற்றவாளியாக இனங்காணப்பட்டார்.

இதனையடுத்து, இவ்வழக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே மேற்படி தீர்ப்பளித்து நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார். (எ)

# காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் மரணம்!

மட்டக்களப்பு, செப். 26

மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூலாக்காடு, சீல்லிக்கொடி பகுதியில் மீன்பிடிக்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் காட்டு யானை தாக்கியதில் உயிரிழந்ததாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

பெரிய வேதம், பூலாக்காடு, கிரான் பகுதியைச் சேர்ந்த 63 வயதுடைய எட்டு பிள்ளைகளின் தந்தையான மூத்த தம்பி சீனித்தம்பி என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த நபர் சம்பவ தினமான நேற்று முன்தினம் காலை தனது வீட்டிலிருந்து பூலாக்காடு, சீல்லிக்கொடி பகுதியில் மீன்பிடிப்பதற்காகச் சென்றார். இரவாகியும் அவர் வீடு திரும்பவில்லை.

இதனையடுத்து, அவரை உறவினர்கள் தேடிச் சென்ற போது, நேற்றுக் காலை யானை தாக்கி உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து, வாழைச்சேனை நீதிவான் நீதிமன்ற உத்தரவுக்கமைய, சம்பவ இடத்துக்குச் சென்ற கோறளைப் பற்று திடீர் மரண விசாரணை அதிகாரி வடிவேல் ரமேஷ் ஆனந்தன், பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார மருத்துவமனையில் சடலத்தை ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மாநகர...

மாநகர சபை மேயர் சுடரேற்றியதைத் தொடர்ந்து சபையில் பிரசன்னமாகியிருந்த அனைத்து உறுப்பினர்களும் மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்தினர்.

இதேநேரம் இந்த அஞ்சலி நிகழ்வில் ஈ.பி.டி.பியின் 4 உறுப்பினர்களும் சபையில் பிரசன்னமாகாது அஞ்சலி நிகழ்வு நிறைவுற்ற பின்னர் சபை அமர்வில் பங்குகொண்டனர். (அ)

## பலஸ்தீனத்தை...

ஊழலுக்கு எதிரான போராட்டம் உலகின் ஒவ்வொரு நாட்டின் கலாசாரத்தின் ஒரு பகுதியாக மாற வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

போதைப்பொருள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்கள் இன்று உலகின் சமீபத்திய பிரச்னையாக மாறிவிட்டதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் பிரச்னை உலகெங்கிலும் உள்ள மில்லியன்கணக்கான மக்களை பாதிக்கும் சிக்கலான சவாலாக மாறியுள்ளது. நாளுக்கு நாள், போதைப்பொருள் மற்றும் தொடர்புடைய பொருட்கள் உலக சந்தையை சாதனை விகிதத்தில் ஆக்கிரமித்துள்ளன.

போதைப்பொருள் வர்த்தகமும் அதன் மூலம் செயல்படும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றமும் பல உலக நெருக்கடிகளுக்கு வழிவகுத்துள்ளன. இவற்றில் ஈடுபட்டுள்ள குழுக்கள் மாநிலங்களை இரையாக மாற்றுகின்றன. இந்த பேரழிவு உலக சுகாதாரம், உலக ஜனநாயகம், உலக அரசியல் மற்றும் உலக நலனுக்கு எதிரான ஒரு பெரிய போக்காக இது மாறிவிட்டது.

இலங்கையில் இந்தப் பெரும் கொள்ளை நோயை ஒழிப்பதற்கான ஒரு நேர்மறையான திட்டத்தை நாங்கள் செயல்படுத்தி வருகிறோம்.

இதேவேளை, உலகில் போரை விரும்பும் எந்த தேசமும் இல்லை. போர் அல்லது மோதல் ஏற்படும் போதெல்லாம், அது சோகத்தில்தான் முடியும் என்பதை நாங்கள் அறிவோம். இந்த தருணத்திலும் கூட, அந்த துயரத்தின் வலி உலகின் பல பகுதிகளிலும் உணரப்படுகிறது. மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக போரின் கசப்பான அனுபவத்தை அனுபவித்த ஒரு நாடாக, அதன் அழிவை நாம் நன்கு அறிவோம்.

போரில் உயிரிழந்த ஆயிரக்கணக்கான மக்களின் நினைவு இடங்களுக்கு வந்து, அவர்களின் பெற்றோர், குழந்தைகள் மற்றும் மனைவியர் எழுப்பும் வலிமிகுந்த வேண்டுகோள்களை கூப்பிய கைகளுடன் பார்க்கும் எவரும், போரைக் கனவு காணக்கூட விரும்பமாட்டார்கள். அந்த வேதனையான காட்சியை நம் கண்களால் பார்த்திருக்கிறோம்.

காசா பகுதியில் நடந்து வரும் கொடூரமான பேரழிவு நமக்கு ஆழ்ந்த கவலையை ஏற்படுத்துகிறது. குறிப்பாக, காசா பகுதி ஒரு வேதனையான மற்றும் சோகமான திறந்தவெளி சிறைச்சாலையாக மாறியுள்ளது. அப்பாவி குழந்தைகள் மற்றும் பொதுமக்களின் அழுகை காது கேளாததாக உள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் பிற அனைத்து தரப்பினரும் ஒப்புக்கொண்டபடி, இரு தரப்பினரும் உடனடியாக போர் நிறுத்தம் செய்ய வேண்டும். அனைத்து மனிதாபிமான உதவிகளையும் தடையின்றி அணுக வேண்டும், அனைத்து தரப்பினரும் பணயக்கைதிகளை விடுவிக்க வேண்டும் என்று நாங்கள் அழைப்பு விடுக்கிறோம்.

இந்த கொடூரமான கொலைகளை முடிவுக்குக் கொண்டுவர நாம் கடுமையாக அழுத்தம் கொடுக்க வேண்டும். பலஸ்தீன மக்களுக்கு ஒரு அரசுக்கான பிரிக்க முடியாத உரிமையை நாங்கள் அங்கீகரிக்கிறோம். இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன மக்கள் இருவரின் நியாயமான பாதுகாப்பு மற்றும் மனிதாபிமான கவலைகளையும் நாங்கள் அங்கீகரிக்க வேண்டும். 1967 எல்லைகளை அடிப்படை யாக கொண்ட ஒரு நியாயமான மற்றும் நீடித்த தீர்வுக்காக நாம் ஒன்றுபட வேண்டும்- என்றார். (அ)

## முல்லைத்தீவை...

வட்டாரத்தை சேர்ந்த நிஷாந்த் (வயது-25), புதுக்குடியிருப்பு - 9ஆம் வட்டாரம் - மல்லிகைத்தீவைச் சேர்ந்த சேர்ந்த ந. தேனுயன் (வயது-25) ஆகியோரே இந்த விபத்தில் உயிரிழந்தனர். அநுராதபுரம் - குருநாகல் பிரதான வீதியில் தலாவ - மீரிகம சந்திக்கு அண்மையாக மொறகொட என்ற இடத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த மூவர் தலாவ, அநுராதபுரம் போதனா மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வானின் சாரதிக்கு ஏற்பட்ட நித்திரைக் கலக்கமே விபத்துக்குக் காரணம் என்று முதல் கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. அநுராதபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## சாவகச்சேரி...

உயிரிழந்தார். படுகாயமடைந்த பெண் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில்

இந்த விபத்தில் இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். படுகாயமடைந்த பெண் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

மீசாலை வடக்கு, புத்தூர் சந்தியைச் சேர்ந்த தி. யதுஸ் (வயது 20) என்ற இளைஞனே இந்த விபத்தில் உயிரிழந்தார். விபத்து சம்பவம் தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-03-05)

## பொலிஸாரை...

இதனையடுத்து பொலிஸார் குறித்த பகுதிக்கு சென்றபோது, பொலிஸாரைக் கண்டு அதிர்சியடைந்த சந்தேக நபர் பொலிஸாரிடமிருந்து தப்பிச் செல்ல முற்பட்டபோது எதிர்பாராத விதமாக அப்பகுதியில் இருந்த கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்தார்.

பொலிஸாரின் விசாரணையில் அதே பகுதியைச்சேர்ந்த 24 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழநதார் எனத் தெரிய வந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேதிக விசாரணைகளை இராமநாதபுரம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

## தமிழ் மக்களுக்கு...

போராட்டமொன்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பமானது. இந்தப் போராட்டம் செம்மணியில் நேற்று ஆரம்பமான நிலையில் எதிர்வரும் 29ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின்போது நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட விவகாரங்களுக்கு நீதி வேண்டியும் உள்நாட்டுப் பொறிமுறையை நிராகரித்தும் சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும் செம்மணி விவகாரததுக்கு நீதி கோரியும் குறித்த உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில், வடக்கின் ஐந்து மாவட்டங்களை சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்ட நிலையில், போராட்டத்தின் ஆரம்பத்தில் தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படத்துக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள், உள்நாட்டு பொறிமுறையை நிராகரிக்கின்றோம், தமிழ் இனவழிப்புக்கும் காணாமல் ஆக்கப்படுதல் போர் குற்றங்கள் மற்றும் மனிதப் புதைகுழிகள் குறித்து நாம் சர்வதேச சுயாதீன விசாரணையை மட்டுமே கோருகின்றோம் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## போதைப்பொருள் அரசாங்கமாக...

குறிப்பிட்டார்.

நேற்றைய பாராளுமன்ற விவாதத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் போதைப்பொருள் அரசாங்கமாக மாறி வருகிறது.

தற்போதைய அரசாங்கம் தங்களது தவறை மறைப்பதற்கு வேறு ஒருவரைக் குற்றம் சுமத்தி வருகிறது.

தற்போது எழுந்துள்ள போதைப்பொருள் பிரச்னையுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்து அதன் பின்னணியில் உள்ளவர்களை நாட்டுக்கு வெளிப்படுத்தவேண்டும்.

இன்று நீங்கள் எங்கள் மீது விரல் நீட்டும் போது உங்கள் மீது நான்கு விரல்கள் திரும்பியிருப்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

தெஹ்ரானில் இருந்து வந்த இரண்டு கொள்கலன்கள் துறைமுகத்தில் உள்ளன. அதில் போதைப்பொருள் இருப்பதாக தங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளதாக சர்வதேச புலனாய்வு தகவல் பிரிவு தகவல் வழங்கியிருந்தது.

இருப்பினும் அரசாங்கம் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவை அனுப்பி சோதனை செய்கிறது. ஆனால் அவ்வாறு சோதனை செய்து அனுப்பிய கொள்கலன் இரண்டிலும் போதைப்பொருள் இருப்பதாக நான் கூறவில்லை. சுங்கப்பிரிவின் தலைமையதிகாரி கூறுகிறார்.

அப்படியானால் சோதனை செய்யாமல் வெளியிடப்பட்ட கொள்கலன்களில் என்ன இருக்கின்றது? அந்த கொள்கலன்கள் பற்றி பேசிய அர்ச்சுனாவை மட்டும் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு அழைத்தது.

சோதனை செய்து பின்னர் போதைப்பொருள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கொள்கலன்கள் தொடர்பில் நீங்கள் எடுத்த நடவடிக்கை என்ன?

தற்போதைய அரசாங்கத்தினர் தங்களது அரசாங்கத்தை வைத்துக் கொண்டு துறைமுகங்களில் இருந்து வெளியான கொள்கலன்கள் தொடர்பில் எம் மீது குற்றம் சுமத்தி வருகிறது. புலனாய்வு தகவல் கிடைக்கப்பெற்ற போதிலும் ஏன் அந்த கொள்கலன்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை- என்றார். (அ)

## போதைப்பொருள்...

என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், நீதிமன்ற உத்தரவின்றி பொலிஸார், இராணுவத்தினர் என யாரையும் எமது அரசாங்கம் கைது செய்ததில்லை. அதனால் இராணுவத்தினரை கைது செய்திருப்பதாக நாமல் எம்.பி. தெரிவித்த விடயத்தில் எந்த உண்மையும் இல்லை. முன்னாள் கடற்படைத் தளபதி, அவர் புலனாய்வு பிரிவில் இருக்கும்போது செய்த ஒரு நடவடிக்கை காரணமாக, நீதிமன்ற உத்தரவின் பேரில் கைது செய்யப்பட்டார்.

இதேபோன்று கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமை தொடர்பில் வரும் முறைப்பாடுகள் தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். போதைப்பொருளுடன் எமது அரசாங்கத்தை தொடர்புபடுத்த நாமல் முயற்சித்தார். ஆனால் போதைப்பொருளுடன் பொதுஜன பெரமுன கட்சி உறுப்பினர் மனம்பேரி தொடர்புபட்டவர் என யாரும் அறிந்த விடயம். அவர் தற்போது கைது செய்யப்பட்டிருக்கிறார். அவர் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோவின் இணைப்புச் செயலாளர். அதனால் போதைப்பொருளுடன் தொடர்புபட்ட பலர் மொட்டு கட்சியில் இருக்கின்றனர் - என்றார். (அ)

## காற்றாலை...

இதனை குறிப்பிட்டுள்ளார்.

அந்த மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

மன்னார் மக்கள் 50 நாட்களுக்கு மேலாக போராட்டம் செய்துகொண்டு, ஜனாதிபதியிடம் இருந்து நல்ல முடிவுகள் வரும் என்று எதிர்பார்த்திருந்த வேளையில், இவ்வாறான ஒரு கடிதம் வந்திருக்கிறது. அதை நீங்கள் உடனடியாக எங்களுக்கு தரவில்லை என்பதும் கவலை அளிக்கிறது.

கடிதத்தை நாங்கள் வந்து தான் பெற்றுக்கொண்டோம். ஜனாதிபதியின் முடிவுகள் மன்னார் மக்களுக்கு மிகவும் அதிர்ச்சியையும் கவலையையும் தருகிறது. ஜனாதிபதி தனது மக்களாகிய எங்களுடன் பேசுவார். மக்களின் வாழ்வை பாதிக்காத வகையில் கலந்தாலோசித்து முடிவுகள் எடுப்பார் என எதிர்பார்த்திருந்தோம்.

நாங்கள் வஞ்சகமான முறையில் ஏமாற்றப்பட்டுள்ளோம். ஜனாதிபதியின் முடிவுகளை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. உடன் வேலைகளை நிறுத்தி ஜனாதிபதியுடன் பேசி முடிவுகளை எடுக்க எதிர்பார்க்கின்றோம் -என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## அரசின் புதிய ...

கேள்வியெழுப்பி உரையாற்றும் போது மேற்கண்டவாறு வினவினார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது-

புதிய கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் கல்வி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. சமய பாடத்தில் சைவ சமயம் சீராக முன்னெடுக்கப்படவில்லை. வரலாறு, சித்திரம் போன்ற பாடங்களில் தமிழர் வரலாறு மற்றும் தமிழ் மொழி இலச்சினைகள் அடையாளங்கள் திட்டமிட்டே மறைக்கப்படுகின்றன. இவற்றுக்கான தீர்வுகள் புதிய கல்விச் சீர்திருத்தத்தில் கொண்டு வரப்படுமா?

இலங்கையின் கல்வித்துறையில் கலைத்திட்ட மறுசீரமைப்பு வேலைத்திட்டங்கள் இப்பொழுது கொண்டு வரப்படுகின்றது. இவ்விடயம் தொடர்பான சில விளக்கமூட்டும் கூட்டங்களும் தங்கள் தலைமையில் நடைபெற்றுள்ளது. ஆனால், புதிய கலைத்திட்டம் மாணவர்களுக்கு சுமையைக் குறைப்பதாகவும், கல்வியில் புதிய புத்தாக்கத் தேடல்களை கொண்டு வருவதற்கான வழிமுறையாகவும் இருக்குமென கூறப்படுகின்றது.

இதேவேளை கல்வி அமைச்சில் தமிழ் மூலமான உத்தியோகத்தர்கள் 20 துறைகளில் இல்லாத நிலைமை காணப்படுகின்றது. அதேபோன்று சைவ சமய பாடத்தில் நடராஜரின் வடிவத்தை உள்ளடக்குவதற்கு தீர்மானிக்கும்போது சிலர் இதனை எதிர்ப்பதாக அறிகின்றோம்.

நீங்கள் ஒவ்வொரு பாடத்துறைகளிலும் அது தொடர்பான பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நிபுணர்கள், சமய நிறுவனங்களையும் அழைத்து எங்களுடனும் கூட்டத்தை ஏற்பாடு செய்து தீர்மானங்களை எடுக்குமாறு கேட்கிறேன். அத்துடன் வரலாறு, சித்திரம் பாடங்களில் தமிழர்களுடைய வரலாறுகள், அடையாளங்கள், மன்னர்களின் பெயர்கள் நிறைய இல்லாமல் செய்யப்படுகின்றது. அந்த விடயங்களில் உங்களின் கரிசனைகளை அறிய முடியுமா?- என்றார்.

இதற்கு பதிலளித்த பிரதமர் ஹரிணி, 2026 ஜனவரியில் முதலாம் வகுப்பு மற்றும் ஆறாம் வகுப்புகளுக்கான பாடத்திட்ட திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்படும். அதன் பிறகு படிப்படியாக மற்ற வகுப்புகளுக்கும் இந்தத் திருத்தங்கள் செயல்படுத்தப்படும்.

முழுமையான திருத்தங்களைப் பற்றிய முழு ஆவணம் விரைவில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படுமாறு திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் சமயம், வரலாறு உள்ளிட்ட பாடங்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட கல்விக் குழுக்களுடன் கலந்துரையாடப்படுகின்றன- என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## சபாநாயகரை சிரிக்க வைத்த அர்ச்சுனா எம்.பியின் கேள்வி!

கொழும்பு, செப். 26

பொது மலசலகூடத்தை இரவு நேரங்களிலும் திறந்து வைக்கக் கூறுமாறு, பாராளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனா சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பொது மலசலகூடம் மூடப்படுவது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனா சபாநாயகரிடம் கோரிக்கையொன்றை முன்வைத்திருந்தார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எங்களுடைய பொது மலசலகூடத்தை 4.30 மணிக்கு மூடுவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். அவர்களுக்கு செல்வதற்குக்கூட இடமில்லையாம். அதில் உள்ள பொருட்களை திருடிச் செல்வதன் காரணமாக இவ்வாறு செய்வதாக குறிப்பிடுகின்றனர். எனவே பொது மலசலகூடத்தை இரவு நேரங்களிலும் பூட்டு போடாமல் திறந்து வைக்கச் சொல்லுங்கள் என அர்ச்சுனா எம்.பி. சபையில் கூறினார்.

அர்ச்சுனா எம்.பியின் இந்தக் கோரிக்கையால் சபாநாயகர் சிரித்தார். (அ)

## அரச ஊழியர்கள், பட்டதாரிகளுக்கு வழங்கிய வாக்குறுதிகள் காற்றில்!

### பொதுஜன பெரமுன சுட்டிக்காட்டு



கொழும்பு, செப். 26

**அரசு ஊழியர்கள் மற்றும் பட்டதாரிகளுக்கு அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.**

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் மற்றும் ஜனாதிபதி ஆட்சிக்கு வந்து ஒரு நிறைவடைந்துள்ளது. கடந்த ஆண்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்பதைக் குறிப்பிடும் வகையில் பல துறைகளின் பொதுச் சேவையாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

போர் வீரர்கள் ஜனாதிபதி செயலகம் முன் போராடுகின்றனர் திருகோணமலை மக்களும், ஆசிரியர்களும், மின்சார சபை ஊழியர்களும் பல இடங்களில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

முந்தைய ஆட்சியில் 64,000 பட்டதாரிகள் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டு 5 ஆண்டுகள் பாடசாலைகளில் கற்பித்துள்ளனர். ஆனால் தற்போதைய அரசாங்கம் அந்த அனுபவமுள்ளவர்களை ஆசிரியர் நியமனத்தில் இருந்து விலக்கி அபிவிருத்தி அலுவலர்களாக நியமித்துள்ளது. மேலும் 50,000 பட்டதாரிகள் இன்னும் நியமனம் பெறாமல் உள்ளனர். ஆசிரியர்களுக்குக் கொடுக்கவேண்டிய நிலுவை சம்பளங்களும் வழங்கப்படவில்லை.

அரசாங்கம் தற்போது கொண்டு வந்துள்ள சட்டமூலம் குழந்தைகளுக்கு அளவுக்கு மீறிய சுதந்திரம் தரக்கூடும் எனவும், பெற்றோரும் ஆசிரியர்களும்கூட குழந்தைகளுக்கு தண்டனை அளிக்க முடியாத நிலை உருவாகும் எனவும் கவலை வெளிப்படுத்தப்படுகிறது-என்றார். (அ)

## இலங்கை பொலிஸ் அதிகாரியை விடுவித்த இராமநாதபுரம் நீதிமன்று!

கொழும்பு, செப். 26

2020ஆம் ஆண்டு இந்தியாவுக்குள் சட்டவிரோதமாக நுழைந்த இலங்கை பொலிஸ் அதிகாரி ஒருவரை விடுதலை செய்து இராமநாதபுரம் முதன்மை மாவட்ட நீதிமன்றம் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கு விசாரணை நேற்று முன்தினம் இடம்பெற்றிருந்த நிலையில் முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி ஏ.கே.மெஹ்பூப் அலிகான், பிரதீப்குமார் பண்டார எனம் இலங்கையைச் சேர்ந்த பொலிஸாருக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், 2 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.

எனினும் அவர் 5 ஆண்டுகளுக்கு மேல் நீதிமன்ற கண்காணிப்பில் இருந்தமையினால் அவரை விடுதலை செய்து உத்தரவிட்டார்.

இலங்கை கொழும்பு துறைமுக பொலிஸ் நிலையத்தில் பணிபுரிந்த பொலிஸ் அதிகாரி பிரதீப்குமார் பண்டார கடந்த 2020 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 5ஆம் திகதி நள்ளிரவு இலங்கைப் படகில் இராமேஸ்வரம் அருகே தனுஷ்கோடி கடற்கரையில் வந்திறங்கியபோது, முறையான ஆவணங்களின்றி இந்தியாவுக்குள் நுழைந்ததாக மண்டபம் மரைன் பொலிஸார் கைது செய்து அவரை சென்னை புழல் சிறையில் அடைத்தனர்.

விசாரணையில் கொழும்பில் பறிமுதல் செய்து துறைமுகம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்ட 23 கிலோ ஹெரோயின் போதைப்பொருள் மாயமானதில் அவரது சகோதரர் இலங்கை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் போதைப் பொருளை பிரதீப்குமார் பண்டார கடத்தி வந்து தன்னிடம் கொடுத்ததாகத் தெரிவித்தார்.

இந்நிலையில் இவ்வழக்கு சி.பி.சி.ஐ.டி பொலிஸாருக்கு மாற்றப்பட்டது. இராமநாதபுரம் சி.பி.சி.ஐ.டி பொலிஸார் வழக்கு பதிவு செய்து, பிரதீப்குமார் பண்டாரவை விசாரணை செய்தனர். விசாரணையில் போதைப்பொருள் கடத்தலில் தனது சகோதரர் தன்னை மாட்டி விட்டதாகவும், அந்த கைது நடவடிக்கையில் இருந்து தப்பிக்க சட்டவிரோதமாக இந்தியா வந்ததாகவும் தெரிவித்தார்.

இதையடுத்து அவர் இராமநாதபுரம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்ற உத்தரவுப்படி திருச்சியில் உள்ள இலங்கை அகதிகளுக்கான சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டார்.

அதன்பின் சட்டவிரோதமாக இந்தியாவுக்குள் நுழைந்ததை பிரதீப்குமார் பண்டார ஒத்துக் கொண்டு குறைந்தபட்ச தண்டனை வழங்கவேண்டும் என நீதிமன்றத்தில் மனு செய்தார்.

இந்த நிலையில் இவ் வழக்கில் நேற்று முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி ஏ.கே.மெஹ்பூப் அலிகான், பிரதீப்குமார் பண்டாரவுக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், ரூ.2 ஆயிரம் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.

பிரதீப்குமார் பண்டார சென்னை புழல் சிறையில் 3 மாதங்கள், அதனையடுத்து பிணையில் திருச்சி சிறப்பு முகாம் என 5 ஆண்டுகளுக்கு மேல் நீதிமன்ற கண்காணிப்பில் இருந்துள்ளார். அவர் நீதிமன்றம் விதித்த அபராதத் தொகையும் செலுத்தினார்.

விதிக்கப்பட்ட சிறைத் தண்டனை 2 ஆண்டுகளுக்கு மேல், அவர் சிறை மற்றும் சிறப்பு முகாமில் இருந்து உள்ளதால் அவரை நீதிபதி விடுதலை செய்தும், அவர் குடியேற்ற நடைமுறைகளை முடித்துக் கொண்டு சொந்த நாட்டுக்கு செல்லலாம் எனவும் உத்தரவிட்டார். (அ)

## மின்சார சபை மறுசீரமைப்பில் அனைவருக்கும் நீதி வேண்டும்!

### மின்சார சபை தேசிய ஊழியர் சங்கம்

கொழும்பு, செப். 26

மின்சார சபையின் மறுசீரமைப்பில் ஊழியர்களுக்கும், மக்களுக்கும், நாட்டுக்கும் நீதி வேண்டும் என்பதற்காகவே போராடுவதாக இலங்கை மின்சார சபையின் தேசிய ஊழியர் சங்க செயலாளர் அஜித் ஹேவாபிரிய தெரிவித்துள்ளார்,

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று முதல் வலுவான தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பிப்பதாகவே எம்முடைய நிலைப்பாடு இருந்தது. ஆனால் சர்வதேச தொழிலாளர் அமைப்பு தலையிட்டு, கலந்துரையாடலை வழங்கியுள்ளது.

எனவே நாங்கள் நெகிழ்வாக இருக்கவேண்டும். எனவே, சம்பந்தப்பட்ட அனைத்து தொழிற்சங்கங்களும் அந்த கலந்துரையாடலில் பங்கேற்கவுள்ளோம். நாம் எவருடைய மிரட்டலுக்கு அஞ்சியும் இந்த தீர்மானத்தை மேற்கொள்ளவில்லை. ஆனால், நாம் கடந்த 4 ஆம் திகதி ஆரம்பித்த சட்டப்படி வேலைநிறுத்தம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகிறது.

எங்கள் போராட்டம் சம்பள உயர்வுக்காக அல்ல. மின்சார சபையின் மறுசீரமைப்பில் ஊழியர்களுக்கும், மக்களுக்கும், நாட்டிற்கும் நீதி வேண்டும் என்பதற்கானதாகும்.

அரசை கவிழ்க்கும் நோக்கமும் எங்களிடம் இல்லை. மின்சார சபை உரியவாறு இயங்கவேண்டும் என்பதே எங்கள் நிலைப்பாடாகும். எனவே ஜனாதிபதி, பிரதமர், அமைச்சரவை அனைவரும் விவேகத்துடன் சிந்தித்து தொழிற்சங்கங்களுடன் முறையாக பேச்சுவார்த்தை நடத்தவேண்டும்-என்றார். (அ)

## மாலைதீவு, பின்லாந்து, ஜேர்மனி அமைச்சர்களுடன் விஜித பேச்சு!

கொழும்பு, செப். 26

ஐக்கிய நாடுகள் சபையின் 80 ஆவது பொதுச் சபை அமர்வில் கலந்துகொள்வதற்காக அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் மாலைதீவு, பின்லாந்து மற்றும் ஜேர்மனி வெளிவிவகார அமைச்சர்களுடன் இருதரப்பு கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளார்.

மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் அப்துல்லா கலீலை அமைச்சர் விஜித ஹேரத் சந்தித்தார். இருவரும் ஒத்துழைப்பை மதிப்பாய்வு செய்து, நெருக்கமான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிகளை ஆராய்ந்தனர்.

அதேவேளை, விஜித ஹேரத் பின்லாந்து வெளிவிவகார அமைச்சர் எலினா வால்டோனனையும் சந்தித்தார். இலங்கைக்கும் பின்லாந்துக்கும் இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்த விவாதங்கள் கவனம் செலுத்தப்பட்டது.

ஜேர்மனியின் வெளிவிவகார அமைச்சர் செராப் குலருடனான சந்திப்பின்போது, இரு தரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது மற்றும் முக்கிய உலகளாவிய பிரச்னைகள் குறித்த பகிரப்பட்ட முன்னோக்குகள் குறித்து வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் விவாதித்தார். (அ)

## நாட்டில் 5.1 மில்லியன் குரங்குகள்!

கொழும்பு, செப். 26

நாட்டில் 5.1 மில்லியன் குரங்குகள் இருப்பதாகவும் விலங்கு கணக்கெடுப்பு அறிக்கையில் பொதுமக்கள் வழங் கிய தகவல்களில் 50 வீதமானவை துல்லியமானவை என்று விவசாயம், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இந்தத் தகவலை முன்வைத்தார்.

உணவுப் பயிர்களைச் சேதப்படுத்தும் விலங்குகளை அடையாளம் காணவும், முறையான ஆய்வை மேற்கொள் ளவும், உரிய நடவடிக்கை எடுக்கவும் இந்த விலங்கு கணக்கெடுப்பு மார்ச் 15 ஆம் திகதி நாடு முழுவதும் நடத்தப் பட்டது.



அதே நேரத்தில் நடத்தப்பட்ட இந்த விலங்கு கணக் கெடுப்பின் போது, குரங்குகள், மந்தி, மர அணில் மற்றும் மயில் ஆகியவை குறித்து ஒரு கணக்கெடுப்பு நடத்தப்பட்டதாக அமைச்சர் கூறினார்.

முடிவுகளின்படி, குரங்குகள் மற்றும் மந்திகள் குறித்து பொதுமக்கள் வழங்கிய தகவல்கள் 50 வீதம் துல்லியமா னவை எனவும் அவர் தெரிவித்தார்.

அதனடிப்படையில் தற்போது நாட்டில் 5.1 மில்லியன் குரங்குகளும் 1.7 மில்லியன் மந்திகளும் 2.6 மில்லியன் மர அணில்களும் 4.2 மில்லியன் மயில்களும் இருப்பதா கவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள நெடுந்தீவுக்குச் சொந்தமான சுமார் 6 கிராம அலுவலர் பிரிவுகளில் இந்த கணக்கெடுப்புடன் தொடர்புடைய விலங்குகள் இல்லாததால் கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.09.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.